செ.வெ.எண்-27 நாள்-16.08.2021

# அரியலூர் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைபெறுவதை முன்னிட்டு, அரியலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைபெறுவதை முன்னிட்டு, அரியலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (16.08.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும் என்கிற வாக்குறுதியை அளித்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ், அரியலூர் மாவட்டத்தில் 7,954 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு 5,810 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. அதன்படி, 206 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 925 நபர்களுக்கு மாதந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளும் என மொத்தம் 1,296 நபர்களுக்கு ரூ.10.27 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் தனித்துவமான அணுகுமுறை மற்றும் திறன்மிக்க செயல்பாட்டால் குறிப்பிட்ட காலத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பெறப்பட்ட மனுக்கள் மீது சிறப்பான நடவடிக்கை எடுத்து தீர்வு கண்டதனைப்பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், அரியலூர் மாவட்ட நிர்வாகத்திற்கு சிறப்பு விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது.

மேலும், கொரோனா நோய்த்தொற்று தடுப்புப் பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளும் வகையில், வீடு வீடாகச் சென்று தொற்று கண்டறியும் பணிக்காக 1,249 களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு தடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. 41 மருத்துவர்கள் மற்றும் 63 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு தடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. கொரோனா நோய்த்தொற்றால் குறைந்த அளவு பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சைக்காக 836 படுக்கை வசதிகளுடன் 15 தற்காலிக சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளித்திட 250 படுக்கை வசதிகளுடன் 01 தற்காலிக சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. 10,728 காய்ச்சல் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு 5,28,543 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது. 43 சளி தடவல் பரிசோதனை சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு 2,52,958 நபர்களுக்கு சளி தடவல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நோய்த்தடுப்பு நடவடிக்கையாக 2,81,392 நபர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. நோய்த்தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்ட 1,125 நபர்களுக்கு அரசு மருத்துவ மனைகளில் 346 ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகள் மற்றும் 167 படுக்கை வசதிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு சிகிச்கை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதல் தவணையாக 1,61,910 நபர்களுக்கும், இரண்டாவது தவணையாக 27,664 நபர்களுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. 1,150 மாற்றுத்திறனாளிகள் முதல் தவணையாகவும், 72 மாற்றுத்திறனாளிகள் இரண்டாம் தவணையாகவும் என 1,222 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்ற 373 நபர்களுக்கு ரூ.8.14 கோடி காப்பீட்டு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் குடியிருப்புகளின் அருகிலேயே தடையின்றி கிடைத்திட 277 வாகனங்கள் மூலம் மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் அறிக்கையில், அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கொரோனா நோய்த்தொற்று காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில், 2,35,730 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.4,000 வீதம் ரூ.94.29 கோடி கொரோனா நிதி உதவியும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 2,35,648 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 16 நபர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாது கொரோனா தடுப்புப் பணியில் கடமையாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் காவல்துறையினர் உட்பட முன்களப் பணியாளர்களின் பணியினை சிறப்பிக்கும் வகையில், காவல்துறையைச் சார்ந்த இரண்டாம் நிலைக் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான 1,019 ஆளிநர்களுக்கு ரூ.5,000/-வீதம் ரூ.50,95,000/- ஊக்கத் தொகையும், 110 மருத்துவர்களுக்கு தலா ரூ.30,000/- வீதம் ரூ.33,00,000/- ஊக்கத் தொகையும், 80 செவிலியர்களுக்கு ரூ.20,000/- வீதம் ரூ.16,00,0000/- ஊக்கத்தொகையும், 234 இதரப் பணியாளர்களுக்கு தலா ரூ.15,000/- வீதம் ரூ.35,10,000/-ம் வழங்கப்பட்டது. மேலும், கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3,00,000 வழங்கும் திட்டத்தின்கீழ் 67 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாது, உறவினர் / பாதுகாவலரின் ஆதரவில் வளரும் குழந்தைகளின் பராமரிப்புச் செலவாக, மாதந்தோறும் தலா ரூ.3,000 ஆயிரம் உதவித் தொகை, அவர்கள் 18 வயது நிறைவடையும் வரையில் வழங்கும் திட்டத்தின்கீழ் 02 நபர்கள் பயனடைந்துள்ளனர். ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, தற்போது கொரோனா நோய்த் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கும் ரூ.5,00,000 இலட்சம் அவர்களது பெயரில் வைப்பீடு செய்யப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டத்தின் மூலம் 02 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் திருக்கோயில்களில் பணியாற்றி வரும் அர்ச்சகர்கள். பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் இதர பணியாளர்கள் என 123 நபர்களுக்கு தலா ரூ.4,000/- வீதம் ரூ.4 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவி மற்றும் 10 கிலோ அரிசியுடன் 15 வகையான மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பத்திரிக்கை மற்றும் ஊடகத்தில் பணியாற்றுபவர்களுக்கு தலா ரூ.5,000/- வீதம் 35 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 75 ஆயிரம் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஜெயங்கொண்டம் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோவில் மாமன்னர் இராஜேந்திர சோழன் அவர்களின் பிறந்த நாளில் திருவாதிரை திருவிழா அரசு விழாவாக கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது மாவட்டத்தில் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப்பெற்றுள்ளது. மேலும், மருத்துவ வல்லுநர்களால் கொரோனா 3ஆம் அலை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அரியலூர் மாவட்டத்தில் இப்பாதிப்பு ஏற்படாத வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, தேவையான மருத்துவ கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அ.பூங்கோதை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.போ.சுருளிபிரபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**